**<u>2026 ஜூலை மாதம் 02– ஆம் தேதி வியாழக்கிழமை</u>**

**<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>**

**<u>O.S. நெம்பர் : 118/2021</u>**

O.S. No.: 118/2021 – நந்தகோபால் த/பெ.சண்முகம் PW2 02.07.2026

**<u>சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

1. நிரூபணவாக்குமூலத்தில் பத்தி 3–ல் 07.06.1996ம் தேதியன்று 1ம் பிரதிவாதியும், பாலசுப்பிரமணியும் கிரையம் ஒப்பந்தம் செய்து கொண்டதாகவும், ரூ.1,05,001/– கொடுத்து கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்தம் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் வாதியின் பெயர் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் முன்தொகை 2வது நபர் சண்முகம் என்பவரிடமிருந்து 1ம் நபர் பாலசுப்பிரமணிய பிள்ளை பெற்றுக்கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.2 ஆவணம் எழுதியபோது எனக்கு சுமார் 15 வயது இருக்குமா என்றால் இருக்கும். வா.சா.ஆ.2 ஆவணத்தின் சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், எனது தாயார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் சரியல்ல, நான் உடனிருந்தேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாதியின் பெயர் சாட்சியாக கூட இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் எழுதும்போது எனக்கு வயது சுமார் 20 இருக்குமா என்றால் இருக்கும். நானும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சியாக இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் வாதியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான்.

3. பொதுவாக ஓர் கிரைய ஆவணம் எழுதும்போது வாங்குபவர், விற்பவர் இருவர் கையொப்பம் இருக்க வேண்டும் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்திலும் வாதியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணம் போலியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 முதல் வா.சா.ஆ.15 வரையிலான ஆவணங்கள் உத்தமபாளையம் நீதிமன்றத்தில்

நடைபெற்ற அ.வ.எண்.97/2019 மற்றும் அ.வ.எண்.103/2019 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான்.

4. அ.வ.எண்.97/2019 வழக்கின் வாதியும் நானும் சேர்ந்து பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் நாங்கள் வழக்கை மேல்நடத்தவில்லை என்று வழக்கறிஞரிடம் சொன்னோம், ஆனால் என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. அ.வ.எண்.97/2019 வழக்கின் தீர்ப்பு பற்றி வழக்குரை மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கின் மீது மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். அ.வ.எண்.103/2019 வழக்கின் வாதியும், இந்த வழக்கின் 1ம் பிரதிவாதியும் வழக்கை வாபஸ் பெற்றார் என்றால் தெரியாது.

5. என்மீது பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன என்றால் சரிதான். குற்ற வழக்குகள் குறித்து நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் அந்த குற்ற வழக்குகளில் பிரதிவாதியும் குற்றவாளியாக சேர்க்கப்பட்டுள்ளார். நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகளும், வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிளும் வெவ்வேறு என்றால் சரியல்ல. 1ம் லக்க சொத்துக்களில் நானும், வாதியும் அபகரிக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு இடையூறுகளை செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. வாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 02.07.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.02 18:10:30 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
02.07.2026.